DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No. 605/2025
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW 2(LW1)
Defence

Name : Sindahn

Father Name /
Husband Name : Vengadesan

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 2nd April 2026.

எதிரி ஆஜர்.

முதண்மை விசாரணை

நான் தற்போது பனையபுரம் சோதனை சாவடியில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.03.2025 அன்று நான் கிளியனூர் சோதனை சாவடியில் தலைமை காவலராக பணியிலிருந்தேன். அப்போது முநிகா.ஆரோக்கியராஜ் மற்றும் நான் மாலை 14.25 மணிக்கு கிளியனூர்

சோதனை சாவடி அருகே வாகன சோதனை செய்துகொண்டிருந்தபோது பாண்டி டூ சென்னை மார்க்கமாக வந்த தனியார் பேருந்தை நான் நிறுத்தி சோதனை செய்தேன். ஆஜர் எதிரி தினேஷ் என்பவர் கையில் வைத்திருந்த பையை சோதனை செய்து பார்க்க அதில் அந்நிய மாநில மதுபான பாட்டில்களான goodfather Beer 650ml- 5NOs, PowerCool beer 500ml- 2Nos, பாட்டில்கள் இருந்தது. மேற்படி பாட்டில்களை சர்ட்சி ஆரோக்கியராஜ் முன்னிலையில் நான் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன். மேற்படி கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கைப்பற்றப்பட்ட Cornona Beer 330ml- 24Nos பாட்டில்களின் புகைப்படம் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு நான் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட வழக்குசொத்துக்களுடன் நிலையம் வந்து தனி அறிக்கை கோட்டக்குப்பம் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.மீனா அவர்களிடம் அளிதேன். மேற்படி தனி அறிக்கை ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆய்வாளர் நிலைய குற்ற எண்.83/2025 பிரிவுகள் 4(1)(a), 4(1)(C), TNP Amendment ACt எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்திற்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்றும் அதன் பதிவெண்ணையும் அ.சா,1 விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

எதிரி பாண்டிச்சேரி மதுபானங்களை வாகனத்தின் எந்த இடத்தில்வைத்து எடுத்துவந்தார் என்று ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். கிளியனுார் அதிக வாகனங்கள் செல்லும் சாலை என்றால் சரிதான். அந்த இடத்தில் தனிநபர்கள் யாரையும் சாட்சியாக நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசரில் தனிநபர்கள் யாரையும் சாட்சியாக நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

படிவம் 91ல் சாட்சிகளின் கையொப்பத்தில் என் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். எதிரி எந்த மதுபானங்களையும் எடுத்து வரவில்லை என்றாலும் புள்ளி விவர கணக்கிற்காக நான் தாக்கல் செய்த தவறான வழக்கிற்கு தற்போது தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

ஓம்/- என்.பிரீத்தி,
நீதித்துறை நடுவர்,
வானூர்.